கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தவுடனே அவர்களுக்கு அன்றைய தினம் என்னென்ன தகவல் கிடைத்ததோ அதைத்தொகுத்து அனுப்பியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 3.75 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். பேருந்தை உடைத்ததால் மட்டு மல்ல; பேருந்து அன்றைய தினம் இயங்காமல் இருந்தது, உடைக்கப்பட்டது எல்லாம் சேர்த்து போக்குவரத்து கழகத் திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 50 ஆயிரம் மதிப் புள்ள கைவண்டித் தொழிலாளர்களுடைய வண்டிகள் அங்கே உடைக்கப்பட்டிருக்கின்றன. எனவே எங்களுக்கு இருக்கிற பிரச் சினை எல்லாம் இரண்டு பக்கமும் தொழிலாளர் களுடைய வாழ்க்கை இதில் பாதிக்கக்கூடிய அளவிற்கு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதை கவனித்து தான் நீங்கள் சொல்லியதற்கேற்ப யார் மீதாவது பழியை போட்டு விட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவதற்காக அல்ல. அங்கே இருப்பவர்கள் இரண்டு சாராரும் தொழிலாளர்கள்; எந்த கட்சியைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள்; இரண்டு பக்கமும் பாதகம் இல்லாமல், உண்மை நிலையை அறிந்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப் போம் என்பதிலே கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் அங்கே யாராவது பழி சொல்லி ஒரு சங்கத்தை மட்டும் விலக்கி வைத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு நிச்சயமாக இல்லை. நான் ஏற்கனவே சொல்லியபடி அவர்கள் நஞ்சப்பன் அவர்கள் இதில் கலந்து கொண்டார்களா? என்ன சொன்னார் என்பதைப் பற்றி நேரடியாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதிலே தயக்கம் இல்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உங்களுக்கு நிச்சயமாக தவறு இல்லாத வகையில், யார் தவறு செய்திருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட நட வடிக்கை எடுப்பதால் தான் எதிர்காலத்தில் இனிமேல் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் வராமல் இருக்கும். தொழிலாளர்கள் சரி யாக நடந்து கொள்ளவேண்டும் என்ற பயமும், உணர்வும் வரும் என்பதை மறந்து விடக்கூடாது.

6. அரசினர் சட்டமுன்வடிவு.

வன (திருத்த) சட்ட முன்வடிவு, 981.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. வரவு, செலவுத் திட்டம் 1981–82—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 1— நில வரித் துறை.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''நில வரித் துறை பற்றி 1-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,16,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''

திரு. டெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள நஞ்சை நிலங்களுக்குள்ள நிலவரியை ரத்து செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1 நில வரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. என். எஸ். வி. சித்தன் :

"Sir, to discuss need to abolish all taxes on lands in this State I move That the allotment of Rs. 6,16,57,000 under Demand No. 1 Land Revenue be reduced by Rs. 1000".

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, சிறிய விவசாயிகளின் நிலத்தீர்வை ரத்துச் செய்யப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. பெ. உத்திராபதி : தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் என்று அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டவர்களுக்கு நிலவரியை ரத்து செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 1-நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,16,57,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''